ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1999/19 - 2016 දෙසැම්බර් මස 26 වැනි සඳුදා - 2016.12.26

*1999/19 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்

### மத்திய மாகாண மாகாண சபை

மத்திய மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட அறிவித்தல்

*மத்திய மாகாண மாகாண ஆளுநர் நிலூக்கா ஏக்கநாயக்க ஆகிய நான், 13 ஆம் அரசியல் அமைப்பு திருத்தத்தின்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154 (ஆ) சரத்தின் 8 (ஆ) பந்தியின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் விதத்தில் மத்திய மாகாணத்தின் ஆறாவது சபையின் நான்காவது கூட்ட அமர்வுத் தொடர் நிறைவு செய்யப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.*

*அக்குறிப்பிட்ட சரத்தின் 08 (அ) பந்தியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி சம்பந்தப்பட்ட சபை இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பள்ளேகலையில் அமைந்துள்ள மாகாண சபை நிர்வாக கட்டட தொகுதியில் அமைந்துள்ள புதிய சபைக் கூட்ட மண்டபத்தில் மீண்டும் கூடுமாறு அழைக்கப்படுகின்றது என இத்தால் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.*

நிலூக்கா ஏக்கநாயக்க,
மத்திய மாகாண ஆளுநர்.

கண்டி,
2016, திசெம்பர் 09.

1- 246



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.